உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

S.C No.603/2023

பெயர் : சாந்தி (அ.சா.4)

தகப்பனார் பெயர் :மூக்கன்

கணவர் பெயர் :

வயது :54

கிராமம் :சொக்கலிங்கபுரம்

வட்டம் :மேலூர்

தொழில் :கூலிவேலை

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

16.07.2025

முதல் விசாரணை:

ஆஜர் எதிரியை தெரியாது. என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது).

அ.த.கு.வி :

என் வீட்டிற்கு அருகே அப்துல்அஜிஸ் என்ற நபர் முன்பு குடியிருந்தார். தற்போது இல்லை. அப்துல் அஜிஸ் மகள் அ.சா.1. ரம்ஜான் பேகம். ரம்ஜான் பேகத்தின் கணவர் தான் ஆஜர் எதிரி என்றால் சரிதான். ஆஜர் எதிரி ரம்ஜான் பேகத்திடம் சண்டையிட்ட விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ரம்ஜான் பேகத்திடம் சமரசம் ஆகிவிட்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல்துறை விசாரணையில் ஆஜர் எதிரி அ.சா.1 ரம்ஜான் பேகத்திடம் அடிக்கடி குடித்துவிட்டு சண்டையிடுவதாகவும்,

சண்டையை பற்றி ரம்ஜான்பேகம் என்னிடம் தெரிவித்ததாகவும் காவல்துறை விசாரணையில் நான் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. கடந்த 27.08.2011 அன்று மதியம் 3.00 மணியளவில் ரம்ஜான் பேகம் வீட்டில் இருக்கும் போது ஆஜர் எதிரி கறிக்கடைக்கு வந்து ரம்ஜான் பேகத்திடம் சண்டையிட்டு, தன்னுடன் இச்சைக்கு கூப்பிடும் போது, நான் நோன்பு வைத்திருக்கிறேன் என்றும், வரமறுத்ததாகவும், ஆஜர் எதிரி என்னை தவிர வேறுயாருடன் தொடர்பில் இருக்கிறார் என்று அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த கத்தியால் வயிறு, இடது கை புஜம், ஆகியவற்றில் குத்தி காயம் ஏற்படுத்தியதாகவும், அதை நான் காவல்விசாரணையில் தெரிவித்துவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை ; இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2025.07.16 20:35:28 +0530

Assistant Sessions Judge

Melur